
THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## இதழின் உள்ளே....

- ☆ ஆசிரியருரை
- ☆ உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
- ☆ பெண்களுக்கான பகுதி
- ☆ சிறுவர்களுக்கான பகுதி
- ☆ வேத அறிவுப் போட்டி
- ☆ நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
- ☆ நாளும் நடப்பும்

பிப்ரவரி 2007


ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 7


கனி 3


## பவுலின் கடிதம்...

உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக.
தீமையை வெறுத்து, நன்மையைப்
பற்றிக்கொண்டிருங்கள்.
சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர்
பட்சமாயிருங்கள்.
கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர்
முந்திக்கொள்ளுங்கள்.
அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்;
ஆவியிலே அனலாயிருங்கள்;
கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்.
நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்;
உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்;
ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.
ரோமர் 12:9-12.












**கிறிஸ்துவின் சபையார் வழங்கும்**

**கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி**

உங்கள் WIN TV -யில் ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பாருங்கள். மேலும்

உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில், ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள்.

செய்தியாளர்
B.அர்ஜுனன்



THE WORD OF CHRIST
P.O.BOX.5
BATLAGUNDU -624 202 S.INDIA

Phone: 04543 263278 Mobile: 9443558041


"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மரம் – 7    பிப்ரவரி – 2007    கனி – 3**

ஆசிரியருரை

# நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறோம்

## Why we are the members of the church of christ



இதற்கான பதிலை வேதாகமத்தில் நாம் பார்க்கிறோம் வேதாகமம் 66 புத்தகங்களைக் கொண்டது. இதில் புதியஏற்பாட்டில் மட்டும் 27 புத்தகங்கள் இருக்கின்றன. நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறோம்? என்ற கேள்விக்கு என்னால் வேதாகமத்திலிருந்து 66 வசன விளக்கங்களைக் கொடுக்க முடியும் அதற்கு மேலும் கொடுக்க முடியும். ஆனால் நீங்கள் புரிந்துகொள்ளும்படி புதியஏற்பாடு புத்தகங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளத்தக்கதாக 27 விளக்கங்களைக் கொடுக்க விரும்புகிறேன்.

**1. இது கிறிஸ்துவினால் கட்டப்பட்டது.** "மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத்.16:18).

**2. தேவன் ஆதியிலே** "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதி.3:15).

**3. இது தீர்க்கதரிசனத்தின்படியாக முன்னுரைக்கப்பட்டது.** "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசா.2:2,3).

**4. கிருபையும் சத்தியமும் இவர்மூலமாகவே உண்டாயின.** "எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17).

**5. அவரே வாசல்.** "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவா.10:9).

**6. அவரே நல்ல மேய்ப்பர்.** "நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" (யோவா.10:11)

**7. அவரே உலகத்தின் பாவத்தை சுமந்துதீர்க்கும்படி தேவனால் அனுப்பப்பட்டவர்.** "மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றான் (யோவா.1:29).

**8. வேறொருவராலும் நமக்கு இரட்சிப்பு இல்லை.** "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12).

**9. அவரை அறிவது நித்தியஜீவன்.** "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவா.17:3).

**10. அவருடைய வார்த்தைகள் ஒழிந்துபோகாது.** "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" (மத்.24:35).

**11. நாம் அவருடைய நாமத்தினாலே கூடிவரவேண்டும்.** "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20).

**12. நாம் எதைச்செய்தாலும் அதை கர்த்தருடைய நாமத்தினாலே செய்யவேண்டும்.** "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" (கொலோ.3:17).

**13. நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறோம்.** "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே.5:30).

**14. அவரே அதன் தலைவர்.** "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக் கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபே.5:23).

**15. சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.** "ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்" (எபே.5:24).

**16. சபையிலே இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே மகிமையுண்டாக வேண்டும்.** "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (எபே.3:21).

**17. பிதாவானவர் தம்முடைய குமாரனுக்குச் செவிகொடுக்கும் படியாக சொல்லுகிறார்.** "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்" (யோவா.17:5).

**18. அவர் தன்னிடத்தில் வருகிறவர்களை புறம்பே தள்ளாதவர்.** "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவா.6:37).

**19. அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை.** "இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்பட்டுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று" (ரோம.9:33).

**20. அவரே சபையில் சேர்க்கிறார்.** "தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்" (அப்.2:47).

**21. அவருடைய பிரமாணம் நம்மை பாவத்திலிருந்து விடுதலை யாக்கிற்று.** "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" (ரோம.8:2).

**22. சாபத்திலிருந்து நம்மை மீட்டுக்கொண்டார்.** "மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா.3:13).

**23. நம்மை ஐசுவரியவான்களாக மாற்ற அவர் தரித்திரரானாரே.** "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2கொரி.8:9).

**24. நாம் அவரை விசுவாசிக்கிறபடியால் மரித்தாலும் பிழைப்போம்.** "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவா.11:25).

**25. நாம் அவருக்குள் மரித்தால் அவருடைய வருகையில் உயிரோடு எழுப்பப்படுவோம்.** "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1தெச.4:16).

**26. அவரில் நிலைத்திருந்து வெற்றி கொண்டால் அவரோடு உட்காரும் பாக்கியம் கிடைக்கும்.** "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (வெளி.3:21).

**27. நாம் முடிவு பரியந்தமும் அவரில் நிலைத்திருந்து அவரை மகிமைப்படுத்தினால் நாம் இரட்சிக்கப்படுவோம்.** "முடிவுபரியந்தமும் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத்.24:13).

இச்செய்தியை வாசிக்கும் அன்பர்களே, நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறோம்? என்ற கேள்விக்கு 27 விளக்கங்களை பார்த்தோம். இது மட்டுமல்ல இன்னும் அநேக விளக்கங்கள் இருக்கிறது. அவருடைய நாமம் மிக முக்கிம் அவருடைய நாமத்தினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம். மற்றபடி நம்முடைய விசுவாசம் விருதா! அவருடைய நாமத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஏனென்றால் "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என்கிறார் (யோவா.12:48). பெயரில் என்ன இருக்கிறது என்ற அநேகருடைய அலட்சியப்போக்கு முடிவில் ஆக்கினைத்தீர்ப்பைக்கொண்டுவரும். ஆகையால் இவைகளைக்குறித்து கருத்தாய் தியானியுங்கள்.

ஆதியிலே கூடிவந்த சீஷர்களுக்கு முதல் முதல் அந்தியோகியாவிலே கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது என்று அப்.11:26–ல் வாசிக்கின்றோம். அன்று முதல் இன்றுவரை இனிமேலும் இந்தபெயராலே கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் என்றே அழைக்கப்படுவார்கள். கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும்போது கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் சபையார் என்றுதான் அழைக்கப்படவேண்டும். முதல் நூற்றாண்டிலே அப்படியே அழைக்கப்பட்டனர் என காண்கிறோம். "ஒருவரையொருவர் பரிசுத்தமுத்தத்தோடு வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோம.16:16). அவருடைய நாமத்தினாலே கூடிவருகிற கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவின் சபையார் என்றுதான் பெயர். வானத்திற்கும் பூமிக்கும்மேலான இந்த நாமத்தை மாற்றினால் அல்லது மறுதலித்தால் வெளிப்படுத்தின விசேஷம் 22:19–ல் சொல்லப்பட்டபடி அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்.

# கர்த்தருடைய இராப்போஜனத்தின் துவக்கம்
# The Institution of the Lord`s Supper

*J.C.Choate,Mississippi*

கர்த்தருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்பே, கர்த்தர் தம்முடைய நினைவு கூருதலாகிய இராப்போஜனத்தை துவக்கினார். கர்த்தருடைய ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்தபோது சங்காரகாரன் அவர்களை சங்கரிக்காமல் கடந்துபோன



நாளை நினைவு கூரும்படி வருடத்திற்கு ஒரு முறை பஸ்கா பண்டிகையை அநுஷ்டித்து வந்த பஸ்காபண்டிகைக்கு இயேசுவும் அவருடைய சீஷர்களும் எருசலேமுக்குப் பயணம் செய்தனர். இயேசு உலகமெங்குமுள்ள தம்முடைய ஜனங்களால் தம்முடைய சரீரம் மற்றும் தம்முடைய இரத்தபலியின் நினைவாக வாரந்தோறும் நினைவு போஜனமாக மாறப்போகிற தம்முடைய இராப்போஜனப் பந்தியை ஆரம்பிக்க இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டார். "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து,ஆசீர்வதித்து, அதைப்பிட்டு ,சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி,அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப்பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"(மத்.26:26–29).

அந்த சமயத்தில் கர்த்தர் இன்னும் சிலுவையில் மரிக்கவில்லை என்பதை தயவுசெய்து கவனியுங்கள், ஆனால் அவர் தம்முடைய மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு தம்மை நினைவு கூருவதை அநுஷ்டிக்கும்படிக்கு இதை ஆரம்பித்தார். அத்தோடு கூட அவர் தாம் அவர்களோடேகூட தம்முடைய பிதாவின் ராஜ்யத்திலே பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்றும் குறிப்பிட்டார். அந்த ராஜ்யம் அல்லது சபை இன்னும் வராதிருந்தது, ஆனால் அது அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வருவதாக இருந்தது. அப்போஸ்தலர் 2ல் குறிப்பிட்டுள்ளபடி பெந்தெகொஸ்தே நாளில் சபை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து, சீஷர்கள் அவருடைய இராப்போஜனத்தில் பங்குகொண்டு அந்த நாளை தொடர்ந்து அநுஷ்டித்து வருகிறபோது அவர் தம்முடைய ஜனங்களோடு இருப்பார்.

ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு, "ஜீவ அப்பம் நானே . உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன்

மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த் அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது யூதர்கள்:இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும்,என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந் திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்" (யோவா.6:48–58).

தொடர்ந்து கூறும் கூற்று முழுவதிலும் இயேசு தம்முடைய வெளிப்படையான சரீரத்தைப்புசிப்பது குறித்தும் தம்முடைய வெளிப்படையான இரத்தத்தை பானம்பண்ணுவது குறித்தும் பேசிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர் ஆவிக்குரிய காரியங்களை, அதாவது தம்முடைய சரீரத்திற்கு நினைவாக பிட்கப்படுகிற அப்பத்தைக் குறித்தும் தம்முடைய இரத்தினாலாகிய பாத்திரத்தைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தார். சிலர் இன்று அப்பத்தில் பங்கு கொள்ளும் போது, அது இயேசுவினுடைய வெளிப்படையான மாம்சமாக மாறுகிறது என்றும், பாத்திரத்தில் அல்லது திராட்சரசத்தில் பங்கு கொள்ளும் போது அது இயேசுவின் உண்மையான இரத்தமாக மாறுகிறது என்றும் விசுவாசிக்கின்றனர். நிச்சயமாகவே இது உண்மையல்ல. இயேசு தம்முடைய ஜனங்கள் மாம்சத்தைத் தின்னும் பழக்கத்தில் ஈடுபடும்படி தம்முடைய இராப்போஜனத்தைப் பயன்படுத்தமாட்டார்.

இப்போது கிறிஸ்து சிலுவையில் மரித்தவராக, அடக்கம் செய்யப்பட்டவராக மேலும் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவராக இருக்கிறார் மற்றும் இராஜ்யம் அல்லது சபையானது அவர் திட்டமிட்டபடி ஸ்தாபிக்கப்பட்டதுமாயிருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களாகிய, அவருடைய குடும்பமாகிய, சபை அங்கத்தினராகிய, நாம் அவருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருகிறவர்களாகயிருக்கிறோம். பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் துரோவா

பட்டணத்திலே அப்பம் பிட்கும்படி கூடிவந்திருந்த நிகழ்ச்சியை நாம் மாதிரியாகக் கொண்டிருக்கிறோம். வேதம், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7)எனக் கூறுகிறது. வேதாகம பண்டிதர்கள் "அப்பம் பிட்குதல்" என்ற வார்த்தைகளை, வாரந்தோறும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி சபை அநுஷ்டிக்கிறவற்றோடு ஒப்பிட்டு அங்கிகரித்துக் கொள்கின்றனர். கிறிஸ்து இராப்போஜனத்தைத் துவக்கினபோது, தம்மை நினைவுகூரும்படி தம்முடைய சீஷர்கள் இனி வரக்கூடிய நாட்களில் கூடிவரும்போது அவர்கள் மத்தியில் அவர் இருப்பார் என்று அவர் கூறியதையும் நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்கள். இன்னொரு சமயத்தில் இரண்டு அல்லது மூன்று பேராவது தம்முடைய நாமத்தில் எங்கே கூடுகிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் அவர் இருப்பார் எனச் சொன்னார்(மத்.18:20).

பவுல் கிறிஸ்தவர்கள் கூடிவந்திருந்த இடத்தில் வாரத்தின் முதல்நாளில் கலந்து கொண்டார் என்பதையும் தயவுசெய்து கவனியுங்கள். வாரத்தின் **எந்த** முதல் நாள்? **ஒவ்வொருவாரத்தின்** முதல் நாளில் கூடினார்கள்,மேலும் உடனுக்குடன் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும்படியாகவும் கிறிஸ்துவின் இராப்போஜனபந்தியை நினைவு கூரும்படியாகவும் கூடிவந்தார்கள். பழைய ஏற்பாட்டின் கீழ் தேவனுடைய ஜனங்கள் ஏழாம்நாளை நினைவுகூரும்படி கட்டளை பெற்றிருந்தனர், ஆனால் **எந்த** ஏழாம் நாள்? **ஒவ்வொரு** ஏழாம் நாள். அந்தப்படியே கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் பங்குகொள்ளவும் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பவுல் 1கொ. 1-ம் அதிகாரத்தில் சபை அங்கத்தினர்களில் சிலர் எவ்வாறு கர்த்தருடைய இராப்போஜனத்தை அசட்டை பண்ணினார்கள் என்பது குறித்து பேசுகிறார். அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை சாதாரணமான தங்களுடைய சொந்த போஜனத்திற்கு மாற்றினார்கள். இது தவறானது. பவுல் அவர்களுக்கு அவர்களுடைய சொந்த போஜனத்தைப் புசிக்க அவர்கள் சொந்த வீடுகளைக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் ஆராதிக்கக்கூடி வரும்போது கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தின் நினைவுகூருதலாக அப்பம் பிட்கும்படிக்கும் பாத்திரத்தில் பானம் பண்ணும்படிக்கும் கூடிவரவேண்டும், தங்களுடைய வயிறுகளை நிரப்ப சொந்த போஜனத்தைப் புசிக்க அல்ல என்று சொன்னார்.

மேலும், பவுல் "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே

பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்''(1கொரி.11:23-29)என தொடர்ந்து கூறினார்.

கொரிந்து சபை கிறிஸ்தவர்கள் இவ்வாறாக நினைவுறுத்தப் பட்டார்கள்,நாமும் அவ்விதமாக, கர்த்தருடைய இராப்போஜனப் பந்தியில் பங்கெடுக்கும் போது நம்மை நாமே சோதித்தறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமில்லாதவனாக இருந்தால், அவன் தேவனிடத்தில் மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பைப் பெற வேண்டியது அவசியம். பாவம் வெளிப்படையாக இருக்குமானால் அவன் சபையாருக்கு முன்பாக, மனந்திரும்புதலை வெளிப்படுத்தும்படிக்கும், தன்னுடைய குற்றங்களை அறிக்கையிடும்படிக்கும், தன்னுடைய சகோதரரிடம் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வதற்கும் செல்ல வேண்டியது அவசியம். விசுவாசமுள்ளவராக, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பியவராக, மன்னிப்புக்கேட்டவராக இருக்கிறவர்கள் இராபோஜனத்தில் பங்குகொள்ள பாத்திரவான்களாக இருக்கிறார்கள். ஒருவன் தன்னை சோதித்தறிந்து, தன்னை சரிசெய்து கொள்ளாமல் இருந்தால், அவன் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமைக் குறைச்சலை கொண்டு வருகிறவனாகவும் தன்னை தண்டனைக்கு உட்படுத்துகிறவனாகவுமிருக்கிறான்.

நீங்கள். கிறிஸ்தவர்களா, கிறிஸ்துவின் சபை அங்கத்தினரா? அப்படியிருப்பீர்களென்றால், பின்பு ஆராதிக்கும்படிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய ஜனங்களோடு, அவர் உனக்காகவும் உன்னுடைய இரட்சிப்பிற்காகவும் அவரையும் அவர் செய்து முடித்தவற்றையும் நினைவுகூரும் நோக்கத்திற்காக அசட்டைசெய்யாதபடி மிகுந்த பயத்தோடு கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி கூடி வரவேண்டும். இந்த வழிபாடு கர்த்தருக்கு கனத்தையும் மகிமையையும் கொண்டுவருகிறது. மேலும் அவரிடத்தில் கொண்ட விசுவாசத்தில் நிலைத்திருக்கும் படிக்கு உங்களுக்கு பலத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது.

என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன் - யோவான் 6:54

# கிறிஸ்தவராயிருப்பது மிகக் கடினம்

# Being a Christian Is Too Hard

-Betty Burton Choate



இயேசு, உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஒருவன் உங்களை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் திருப்பிக் கொடுங்கள், மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள், இதுபோன்ற பல கட்டளைகளைக் கொடுத்தார். அவர் தம்முடைய சீஷர்களை சற்குணராகயிருக்கவும், மற்றவர்கள் ஒரு மைல் தூரம்வர பலவந்தம் பண்ணினால், இரண்டுமைல் தூரம் போக விருப்பமாயிருக்கவும் கேட்டுக் கொண்டார்(மத்.5,6,மற்றும்7–ம் அதிகாரங்களை பல அடிப்படை சத்தியங்களுக்காக பாருங்கள்)

சிலநேரங்களில் ஜனங்கள் கிறிஸ்தவத்தின் மிக உயர்ந்த நன்னெறிகளையும், சமூக நிலைகளையும் வாசிக்கும் போது,அவர்கள், "இது மிகக்கடினம்" நான் இப்படிப்பட்ட நல்லவனாக இருக்கமுடியாது; உண்மையில், மேலும் நான் இப்படிப்பட்ட நற்குணசாலியாகயிருக்க முயற்சிக்கவில்லை, ஏனென்றால் நான் உலகத்திலுள்ள இனிமையான, சந்தோஷமான ஒவ்வொன்றையும் விட்டுவிட வேண்டியிருக்கும் என முடிவு செய்கின்றனர்.

எனவே **கிறிஸ்தவத்தை புறக்கணிக்க தீர்மானம் செய்யப்படுகிறது ஏனென்றால் இதன் வாழ்க்கைதரம் உண்மைக்கு மேலாக உயர்ந்தது எனக்கருத வசப்படுத்தப்படுகின்றனர்.**

இயேசு இவ்வாறு அழைக்கிறார் என்பது உண்மை: "ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் **தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு,** என்னைப் பின்பற்றக் கடவன்"(லூக்.9:23). தேவனால் மேலும் நாம் அறிவுறுத்தப் படுகிறோம், "...நீங்கள் அவர்கள் **நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்** என்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள **கர்த்தர்** சொல்லுகிறார்"(2கொரி.16:17,18)

குறிப்பிடப்பட்டுள்ள பல வசனங்களில் இவ்வசனங்கள் தேவனைப் பற்றிய பல மிகமுக்கியமான காரியங்களைக் நமக்கு கூறுகிறது. (1) நாம் அவருடைய நிலைக்கு வரவேண்டும்; நமக்காக அவர் தம்மை குறைத்து கொள்ளுகிறதில்லை. (2) கிறிஸ்தவத்தின் அடிப்படை சுய–வெறுப்பு ஆகும். (3) நாம் ஒரு கிறிஸ்தவனாகயிருக்க எப்பேர்பட்ட நஷ்டத்தையும் தாங்கிக் கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும் – அது நம்முடைய சிலுவை. (4) கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கர்த்தர் நம்மை நடத்துகிற வண்ணமாக அவரை பின்பற்றுகின்ற ஒரு செயலாகும்.

மேலும், ஆம், நாம் உலகத்தின் எண்ணங்களுக்கும் வழிகளுக்கும் பழக்கப்பட்டவர்களாயிருக்கும்போது தேவனுடைய மாதிரியின் மூலம் வாழ்வதற்கு கற்றுக்கொள்வது என்பது எளிதானதல்ல. நாம் 2பேது.1:4ல் பேதுரு கூறுவது போல் திவ்வியசுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு – நம்முடைய பழைய மனுஷ சுபாவத்திற்குப் பதிலாக புதியதான நம்முடைய பிதாவின் சுபாவத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஆனால் இந்த புதிய ஜீவியத்திற்குத் தேவையான 'கடினமாக' தோற்றமளிக்கின்ற இவற்றில் இனிமையும் அருமையுமான நோக்கமிருக்கிறது:

**★ நாம் ஏன் வெறுப்பதற்குப் பதிலாக அன்பு கூர அறிவுறுத்தப் பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால் வெறுப்பு என்பது காயங்கட்டுவதற்குப் பதிலாக சத்துருக்களை உருவாக்கும் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகும்; வெறுப்பு தன்னைக் கொண்டிருக்கிற மனித சரீரத்தையே உருக்கி, முடிவிலே தன்னிலே கேடு விளைவிக்கும்!

**★ நாம் ஏன் மற்றவர் ஒரு மைல் தூரம் வர பலவந்தம் பண்ணினால் "இரண்டு மைல் தூரம் போக" அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால் நாம் இருதயத்தில் மிகுந்த கோபத்துடனே (நம்முடைய சுய சரீரத்திற்குள் திராவகம் ஊற்றப்பட்டதுபோல) "முதல் ஒரு மைல் தூரம்" செல்லுவோம், ஆனால் நாம் விருப்பத்துடனே இரண்டாவது மைல் தூரம் செல்ல முயற்சிப்போமானால், நம்முடைய இச்செயல் நம்முடைய கோபத்தை ஆற்றும் மேலும் இவ்வாறாக நம்முடைய ஆவிக்குரிய, உணர்ச்சிபூர்வமான, சரீரப்பூர்வமான ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும்!

**★ நாம் ஏன் நம்மை நாமே வெறுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால் இயேசுவும் கூட, "..... என்னிமித்தமாக வீட்டையாவது. சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும் இம்மையிலே நூறத்தனையாகவும் மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான்" என வாக்களித்துள்ளார். ஆனால் நாம் தாமே இச்சைகளையும் உலகத்தின் தீமைகளையும் வெறுக்காதிருக்கும் வரையில் அவர் தம்முடைய விருப்பத்தையும் வாக்களித்திருக்கிறதையும் நமக்காக அவர் செய்யமுடியாது.

**★ நாம் ஏன் வழியில் துன்பமிருக்கும்போதும் கூட இயேசுவைப் பின்பற்றும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால், இவ்வுலகில் நாம் ஜீவிப்பதற்கான சரியான மாதிரியை அவர் நமக்குக் காண்பித்திருக்கிறார், மேலும் நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோமானால் இம்மையிலும் மறுமையிலும் சகலமும் நமக்கு நன்மையாகயிருக்கும். துன்பமா? முழுவதும் அச்சமூட்டுகிறதும் தியாகம் பண்ணுகிறதுமாக எண்ணி நாம் பயப்படுகிறோம். ஆனால் இது நாம் இரட்சிப்படையும்படிக்கு இது இயேசு சுமந்த சிலுவையின் மூலம் நிறைவேறியது. இதைப்போலவே, நாம் எப்பேர்ப்பட்ட துன்பத்தையும் தாங்கவேண்டும் அதன் விளைவும் நம்முடைய இரட்சிப்பாக இருக்கும், நம்முடைய நஷ்டமாக இராது!

**☆ நாம் ஏன் "அசுத்தமான" வற்றோடு பங்குகொள்ளக் கூடாது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால் நம்முடைய பிதாவும், இயேசுவும் பரிசுத்த மானவர்களாயிருக்கிறார்கள். மேலும் நாமும் பரிசுத்தமாயிருப்பதின் மூலம் குடும்ப சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாயிருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த பாவம் நிறைந்த உலகத்தின் "அசுத்தமான" வற்றிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளுவது நம்முடைய பாதுகாப்பாயிருக்கும், அது நம்முடைய தியாகமல்ல. தேவன் **தடுக்கிறது** நமக்கு நல்லதாயிருக்கிறது என்பதும் ஒன்றுமில்லை; அவர் **எதிர்பார்க்கிறது** நமக்கு தீமைநிறைந்தாயிருக்கிறது என்பதும் ஒன்றுமில்லை. நம்முடைய அன்பின் பிதா– நாம் முழுமனதோடே ஐக்கியங்கொண்டு அவருடைய பிள்ளைகளாக இருக்க விரும்பினால், அவர் எல்லாவற்றிலும் நம்மோடிருக்கிறார்!

"என்னிடத்தில் வாருங்கள்" என்ற இயேசுவினுடைய அழைப்பு நம்முடைய சுய நன்மைக்கென்று மாறாத இனிய வாக்குத்தத்தினைக் கொண்டிருக்கிறது. அவர், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத்.11:28,29) என்கிறார்.

நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை மிகக்கடினமானது என தீர்மானித்திருப்பீர்களென்றால், **திரும்பிச் சென்று இந்த தெரிந்துகொள்ளுதலை மறு ஆய்வு செய்யுங்கள்.** கிறிஸ்துவுக்குள்ளான இனிமையும் இளைப்பாறுதலும் நிறைந்த வாழ்வின் நன்மையினை இழந்துவிடாதீர்கள். பாவம் நிறைந்த உணர்வுகளை வெறுப்பது என்பது மிகக்கடினம் என உங்களிடம் கூறுகின்ற சாத்தான் ஒரு பெய்யன்.

**இருபத்தைந்தாவது மாவட்ட வாசகர் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள்**

நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக் கிறீர்களே கலாத்தியர்3:26



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம்

**உலகின் பல பகுதியில் உலாவரும் கிறிஸ்துவின் வசனம் மாதஇதழின் துவக்க ஆண்டு 1992**

கிறிஸ்துவ தலைமைத்துவ பயிற்சி பாடங்கள்
Christian Leadership Training Course

பாடம் - 12

# பிரசங்கியார் பணத்தை எப்படி பயன்படுத்துவது

## The Preacher`s Use of Money

J.C.Choate

இந்தப் பாடங்களுடைய முதன்மையான நோக்கம் என்னவென்றால் உங்களில் தங்களை தலைவர்கள் அல்ல என்று எண்ணுபவர்களுக்கு கர்த்தருடைய சபையில் தலைவராயிருப்பது என்றால் என்ன என்று விளங்கச் செய்வதே. இரண்டாவது நோக்கம் முன்பே கிறிஸ்தவர்களாயிருப்பவர்கள் தலைவராக வரத் தகுதியுள்ளவரிடம் கர்த்தர் எதை எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஒரு ஆவிக்குரிய தலைவன் பிறப்பதில்லை. ஆனால் அவன் படிப்பு மற்றும் சேவையின் மூலம் உருவாக்கப்படுகிறான். நாம் பிரசங்கியாரைப் பற்றிய பாடத்தைத் தொடர்வோம். அவருடைய தேவைகள் பிரச்சனைகள், மற்றும் வேலை. இப்பொழுது நாம் பிரசங்கியார் பணத்தை எப்படி பயன்படுத்துவது என்ற தலைப்பை படிப்பதற்கென்று எடுத்துக்கொள்வோம்.

பவுல் சொல்கிறார்:" உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக் கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமா யிருக்கிறாய்"(1தீமோ.6:7-12).

பிரசங்கியார்களும் மற்ற அநேக மக்களை போன்றவர்கள் தான் அவர்கள் அடிக்கடி பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் பிரசங்கிக்க விரும்புகிறார்கள், ஆனால் அதைச் செய்யும்படிக்கு அவர்கள் ஒரு ஊதியத்தைப் பெற்றிருக்க வேண்டும். சபையானது அவர்களுக்கு உதவி செய்ய முடியாத பட்சத்தில் அவர்களாலும் வேறு உதவியை பெறமுடியாத பட்சத்தில் அவர்களுக்கு பணத்தை எப்படி பெற்றுக் கொள்வது என்பதற்கு பலதிட்டங்களை உருவாக்கலாம். அவர்கள் தங்களுக்கு ஒழுங்காக பண உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு ஒவ்வொரு மாதமும் பலரை போய் சந்திக்கலாம் அப்படிக் கொடுப்பவர்கள் தேவனுக்கு முன்பாக தான் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என்று நம்பலாம். பிரசங்கியார் தனக்கு உதவிசெய்பவர்கள்

தான் நடத்தும் எந்த ஒரு தொழுகையிலும் கலந்துகொள்ளாத காரணத்தால் பிரசங்கமே செய்யாமல் இருக்கலாம். அப்படி என்றால் அது ஒரு ஏமாற்றத்தின் அமைப்பாகும்.

ஒரு பிரசங்கியார் தன்னுடைய சம்பளத்தை (ஊதியத்தை) நேர்மையாகவோ, நேர்மையற்ற வழியிலோ பெற்றுக் கொண்டாலும் அதில் இருக்கிற துக்கமான உண்மை என்னவென்றால் அநேகருக்கு அந்த பணத்தை எப்படி கையாளுவது என்பது தெரிவதில்லை. மேலும் விசேஷமாக அவர்கள் தங்கள் தேவைக்கு அதிகமாக பெற்றுக் கொள்ளும்போது அப்படியாகிறது. சிலர் வெளிநாட்டிலிருந்து உதவி பெறுகிறார்கள். அவர்கள் மற்ற சகோதரர்களைவிட பொதுவாக அதிக பணத்தைப் பெறுகிறார்கள். உண்மையில்லாதவர்கள் இரண்டு மூன்று இடங்களிலிருந்து பணத்தைப் பெறுவதன்மூலம் அதிக பணத்தை உடையவர்களாவார்கள். அப்படிபட்டவர்கள் ஆடம்பரமாக செலவு செய்யும்போதும் வீடுகள், நிலங்கள், வாங்கும்போதும் ஸ்கூட்டர், கார் போன்றவற்றில் முதலீடு செய்யும் போதும் தங்கள் புதிய சொத்துக்களைப் பற்றி பெருமையாய் பேசும்போதும் அவர்கள் தவறான வழியிலே சம்பாதித்த உண்மை வெளிப்படும். மேலும் பணம், பண ஆசை அநேக பிரசங்கியார்களை பணம் பெற்றுக்கொள்ளுவதற்கு வேதத்திற்கு விரோதமான வழிகளை கையாளச் செய்கிறது. அவர்கள் ஏமாற்று வித்தைகளையும், பொய்யையும் பயன்படுத்தலாம். அப்படிப்பட்டவர்கள் பெற்றுக் கொண்ட பணத்தை தவறாக பயன்படுத்தி அப்படிப் பெற்றுக்கொண்டதைக் குறித்து பெருமையாய்ப் பேசுவார்கள். அவர்களுக்கு என்ன சம்பவிக்கும்? அவர்கள் முடிவிலே தங்களை தாங்களே அழித்துக்கொள்வார்கள். மேலும் அநேக சமயங்களில் முடிவு சீக்கிரம் வரும். ஏனென்றால் எவ்வளவு காலம் தான் பிடிக்கபடாமல் மக்களை ஏமாற்ற முடியும்? ஆனால் அவர்கள் ஏமாற்று வேலை செய்து கொண்டிருக்கும் பட்சத்தில் யார் அவர்களுடைய கூட்டங்களுக்குச் செல்வார்கள். மேலும் அவர்கள் பிரசங்கத்தை யார் நம்புவார்கள்? அவரைத் தெரிந்த அநேகர் ஏதோ தவறு நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

மறுபடியும் சொன்னால் பிரசங்கியார்களும் மற்ற மனிதர்களை போலவே தங்கள் கிறிஸ்தவ சகோதர–சகோதரிகளிடமிருந்து கடன் வாங்கும் பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். மிகவும் உண்மையாய் ஜீவித்து கர்த்தருக்கு விசுவாசமாக ஊழியம் செய்பவர்கள் கூட இந்தத் தவறைச் செய்யலாம். அவர்கள் தங்கள் வருவாய்க்கு தகுந்தபடி வாழக்கற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் இன்றைக்கு விருந்துண்டு நாளைக்கு வறுமையை சந்திக்கிறவர்கள். அவர்கள் தங்களுடைய விருப்பத்தையே அதிகமாக பார்க்கிறார்கள். அதிக செலவு செய்து பின்பு கடன் வாங்குவது என்பது பணத்தை திருப்பி கொடுப்பதில் கஷ்டத்தை உண்டாக்கும். இப்படிப்பட்ட நிலை சண்டையும், மோசமான உணர்வுகளையும், பிரசங்கியாரை அறிந்தவர்கள் மத்தியிலே நம்பிக்கை இழப்பையும் மரியாதை இழப்பையும், தங்களுக்கு கடன் கொடுத்தவர்கள் மனதிலே எழச்செய்யும். பிரசங்கியார்களே, நான் உங்களுக்கு சொல்லும் ஆலோசனையெல்லாம் கடினமாக உழைத்து இந்த குழியில் விழாதபடி ஜாக்கிரதையாய் இருங்கள்.

குறைந்த வசதிக்குள் வாழுங்கள் கூடுமானால் குறைவாகவே வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் உங்களுக்கு உள்ளவைகளில் மட்டுமே வாழுங்கள் இவை எல்லாவற்றிலும் உங்களுக்கு போதுமானதாக இல்லை என்றால் வாரத்தினுடைய இறுதி நாட்களில் பிரசங்கம் செய்து உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது இந்த வேலைக்கு உதவியாயிருங்கள். உங்கள் தேவைகளைச் சந்திக்க தனிப்பட்ட வேலை செய்து சம்பாதிக்கலாம்.

இச்சிப்பதை வேதம் கண்டனம் செய்கிறது. பண ஆசை, பணத்தை கையாளும்போது தவறாக உபயோகப்படுத்துவது, பணத்தை வீணாக்குவது மேலும் பணத்தை கையாளும்போது ஏற்படுகிற மற்ற பிரச்சனைகள் போன்றவற்றை வேதம் கண்டிக்கிறது. ஒவ்வொரு நாளும் தன்னுடைய நடத்தையில் உண்மையாயிருக்கிறவனையே கர்த்தர் தன்னுடைய பிரசங்கியாராக இருக்க விரும்புவார். பிரசங்கிப்பது என்பது மிகபெரிய காரியம் தான். ஆனால் நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் பிரசங்கிக்கும் போது உண்மையாயிராவிட்டால் அது உங்களுக்கு விரோதமான பயங்கர பாவம், சபைக்கும் விசேஷமாக தேவனுக்கும் விரோதமானது. அநேக பிரசங்கியார்களுக்கு பணத்தினால் வரக்கூடியது மற்றொரு பிரச்சனையாகும் கர்த்தருடைய சித்தத்தின்படி வாழ உண்மையாகவும், நேர்மையாகவும் எல்லாவற்றையும் செய்ய முயற்சிக்கிறேன் என்று சொல்பவர்களைப் பற்றி நான் பேசுகிறேன் — அவர்கள் வேதம் போதிக்கிறபடி கர்த்தருக்கென்று தங்கள் வருமானத்திலிருந்து கொடுப்பதில்லை. சபைக்குக் கொடுப்பதை பற்றி அநேக பிரசங்கியார் பிரசங்கித்தால் கூட தாங்கள் பிரசங்கிக்கிறபடி செயல்படுவதில்லை. அநேக பிரசங்கியார்கள் இந்த சட்டத்திலிருந்து தங்களுக்கு விதிவிலக்கு உண்டென்று நினைக்கிறார்கள். அநேகர் தாங்கள் உண்மையாக எவ்வளவு கொடுத்தார்களென எவருக்கும் சொல்ல வெட்கப்படுவார்கள். பொதுவாக இது ஒரு அடையாளமான கொடையே உண்மையைச் சொல்வதென்றால் அவர்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுக்கிறதில்லையென அவர்கள் அறிகிறபடியினால் அவர்கள் கொடுப்பதைப் பற்றி அதிகமாக பிரசங்கம் செய்வதில்லை.

அனனியா, சப்பீராளை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? அவர்களுக்கு என்ன சம்பவித்தது? அந்த சமயம் தூரமான இடங்களிலிருந்து வந்து எருசலேமில் தங்கி வேதவார்த்தைகளைக் கற்று, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மற்றவர்களின் ஐக்கியத்தில் பெலப்படும்படியாக வந்த கிறிஸ்தவர்களுக்கு உதவிசெய்யும்படியாக விசேஷித்த பணத்தேவையிருந்தது. அதன் விளைவாக அங்கிருந்த சீஷர்களில் சிலர் தங்கள் உடமைகளை யெல்லாம்கூட விற்று தேவைப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கும்படி கொடுத்தார்கள். இது அவர்கள் மீது கட்டாயமாக திணிக்கப்பட்ட ஒன்றல்ல மாறாக அவர்களாகவே முன்வந்து செய்தது. அனனியாவும், சப்பீராளும் இதற்கு உடன்பட்டு தங்களுக்கு இருந்த நிலத்தில் ஒரு பகுதியை விற்று அதில் ஒரு பகுதியை தாங்களே வைத்துக் கொண்டு அப்போஸ்தலரிடம் எல்லாவற்றையும் கொடுப்பதாக பொய் சொன்னார்கள். அவர்களுடைய பொய்யின் விளைவாக

அவர்கள் இருவரும் அப்போஸ்தலர் பாதத்திலே விழுந்து செத்தார்கள் (அப்5:1–11). கர்த்தர் இந்த முறையை இன்றைக்கு பயன்படுத்தினால் எத்தனை பிரசங்கியார்கள், சபை அங்கத்தினர்கள் முழுமையாகவுங்கூட காணிக்கை எடுக்கும் நேரத்தில் விழுந்து சாவார்கள்.

தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதற்கு ஏற்றவாறு பிரசங்கியார்கள் கொடுக்கவும் வேண்டும். தங்கள் சகோதரர்களுக்கு மாதிரியாய் இருக்க தக்கதாக தங்கள் மனதில் நியமிக்கப்பட்டபடியே உற்சாகமாய்க் கொடுக்க வேண்டும் (1கொரிந்தியர் 16: 2. 2கொரிந்தியர் 9:6–7). இதை அவர்கள் செய்வார்களானால் கொடுப்பதைப் பற்றி பிரசங்கிக்கும்போது சகோதரர்கள் அதற்கு செவிசாய்ப்பார்கள்.

ஆம். பிரசங்கியார்களும் அவர்கள் குடும்பங்களும் பணத்தை எப்படிக் கையாளுவது என்பதைப் பற்றி பாடம் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். இந்த விஷயத்தில் இயேசு அவர்களுக்கு உதவி செய்யும்படி அவர்கள் அனுமதித்தால், அவர்கள் மிகவும் நன்றாயிருப்பார்கள்.

## ராஜரீக ஆசாரியர்

*-Robert Gem*

உன்னத தேவன் – உந்தன்
உள்ளம் அறிந்தாரே
உன்னதத்தில் ஓசன்னா – என்றும்
உள்ளம் பாடிட மாட்டீரோ

அவர் மகத்துவமானவரே
அந்த மகிமையை உணராயோ
அவர் வழி சத்தியமே
அன்பர் இயேசுவுக்கு துதிசொல்லுவோம்

கிறிஸ்து சத்தியம் ஜீவனுமே – என்றும்
கிருபை தரும் தேவனே
கவலையற்றிருப்போரே
கர்த்தர் தண்டிக்காமல் விடுவாரோ

பாவிகளை மனந்திரும்ப
பரந்த பூமியில் அவதரித்தார்
சொந்தமானதில் வந்தார்
சொந்த ஜனமோ ஏற்கவில்லை

மதிகெட்ட யூத ஜனமே
மன்னன் இயேசுவை ஏற்கமாட்டீரோ
புறஜாதி விசுவாசித்தார்
புதிய ராஜரீக ஆசாரியராக்கினார்

அழியா உலகு... பரலோகமே
ஆண்டவர் இயேசு அழைத்துச் செல்வார்
அலைந்து திரிந்த உள்ளமே – இனி
ஆசீர்வாதமாய் இருப்பாய்



கவிஞர்– ராபர்ட் ஜிம்
தஞ்சை கிறிஸ்துவின் சபை

## ஜெபியுங்கள்



- 25வது கருத்தரங்கை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக ...
- நம்முடன் இணைந்து பணியாற்றுகிறவர்களுக்காக ...
- கிறிஸ்துவின் வசன மாத இதழ் மற்றும் வானொலி, தொலைக்காட்சி, வேதாகம கல்லூரி ஊழியங்களுக்காக...
- ***Bro.J.C & Sis.BETTY*** சுகத்திற்காக ...
- அனைத்து மாவட்டங்களிலும் சபைகள் கட்டப்பட ...



### வேதஅறிவுப்போட்டி எண் 77-ன் விடைகள்

1. எத்திரோ -யாத்.18:11
2. விட்டுவிலகு, தீமோத்தேயுவுக்கு -2தீமோ.3:5
3. யோசேப்பு -ஆதி.47:24
4. பொக்கிஷங்களெல்லாம் -கொலோ.2:3
5. பயப்படவேண்டும் -லேவி.25:17
6. ஜெபம் பண்ணுங்கள், யாக்கோபு -யாக்.5:16
7. இஸ்ரவேல் -உபா.11:19
8. அறிந்திருக்கிறான் - 1யோவா.4:7
9. தன் ஆத்துமாவைப்போல -1சாமு.18:3
10. வெண்வஸ்திரம் -வெளி.3:5

### இஸ்ரேல் தேசத்தில் நாசரேத்

இஸ்ரேல் நாடு மிகச்சிறிய நாடு. இந்நாட்டின் மொத்தநிலப்பரப்பு 14,000 சதுரமைல்கள். இங்கு உள்ள பட்டணம் நாசரேத். இயேசு கிறிஸ்துவினுடைய பெற்றோர்கள் யோசேப்பும், மரியாளும் இப்பட்டணத்தைச் சார்ந்தவர்கள். இயேசு கிறிஸ்து பெத்லகேமில் பிறந்தபோது அவர் இளமை பருவத்தில் நாசரேத் ஊரில் வளர்ந்தார். ஆகையால் அவர் 'நசரேயன்' என்று அழைக்கப்பட்டார். நாசரேத் பட்டணம் கடல் மட்டத்தில் இருந்து 1230 அடி உயரத்தில் இருக்கிறது.

*-M.Rajamani*

### வேதஅறிவுப்போட்டி எண் 77-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| IRA. எத்திராசன் | -சங்கரி |
| N. கமலவேணி | -சென்னை |
| G. பூங்கோதை | -வெ. பாளையம் |
| S.R. பெரியசாமி | -சானார்பாளையம் |
| D. ஏசுதாஸ் | -சித்தூர் (A.P) |
| P. அலிஸ்மேரி | -வத்தலக்குண்டு |
| G.P. ஏசையன் ராஜ் | -கோபி |
| P. சரவணகுமார் | -கோபி |
| E. ஜோசப் தேவதாஸ் | -நாகமலை |
| C. ஜாய் கிறிஸ்டினா | -நாகமலை |
| Mr. இம்மானுவேல் | -கடலூர் |
| P.S. லலிதாபிரேமகுமாரி | -மதுரை |
| G. பூங்கோதை | -வெ. பாளையம் |
| J.S. நிர்மலாஜான் | -மதுரை |
| S. ஆனந்தராஜ் | -ஈரோடு |
| Mrs. ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ் | - மதுரை |
| K. மோகன் | - குமாரபாளையம் |
| G. கிரேஸ்ஜெயா | -வெள்ளக்குளம் |
| A. ஆனந்த் | -நாகமலை |

தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது
1யோவான் 1:5

# ஞானஸ்நானம் என்றால் என்ன?

*P.R.SWAMY*
*Bangalore*

இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம். ஒருவன் எப்படி கிறிஸ்துவுக்குள்ளாகிறான் என்பதை வெளிப்படுத்த புதிய ஏற்பாட்டில் இரண்டு வேதவசனங்கள் உண்டு. ஒன்று கலா.3:27. "ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" மற்றொன்று ரோம.6:3. "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா" இந்த இரண்டு வசனங்களையும் கூறியவர் பவுல், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசி இருக்கிறார். இவர் தான் 2கொரி.1:17-ம் வசனத்தில் "ஞானஸ்நானத்தை கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்" என்றார். உண்மைதான் சுவிசேஷத்தில் நாம் கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகளில் ஞானஸ்நானமும் ஒன்று. ஞானஸ்நானத்தில் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாகிறான். ஆகவே, சுவிசேஷத்தை பிரசங்கிப்பதுதான் எங்கள் குறிக்கோளும் கூட. வேதம் வலியுறுத்தாத அளவுக்கு அதிகமாக வலியுறுத்த எங்களுக்கு அதிகாரமில்லை. ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை பவுல் உணர்ந்திருந்தார். அவரைப் பார்த்து அனனியா, "சவுலே, இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் அப்.22:16. அதை மறந்து விட்டிருப்பாரா?

பழைய ஏற்பாட்டில், சுத்திகரிப்பு முறைகளை குறித்து அனேகம் பேசப்பட்டு வந்திருந்தாலும். புதிய ஏற்பாட்டில் சொல்லப்படவில்லை. இந்த ஞானஸ்நானத்தை அறிமுகம் செய்தவர் யோவான்ஸ்நானகன். யோர்தான் நதியில் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யூதர் போன்றோர் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார்கள்(மத்.3:6). இந்த யோவானைப் பார்க்கிலும் இயேசு அநேகம் பேரை சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறார் (யோவா.4:1). மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பின்னர், தம் சீஷர்களுக்கு கொடுத்த பிரதான கட்டளையில், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார் (மத்.28:18-20).

இது நீரில் முழுக்குதலான, ஞானஸ்நானம். அப்போஸ்தலர்கள் அவ்வாறே செயல்பட்டுவந்தனர். பரிசுத்தஆவியினால் நிரப்பப்படுகிற

ஞானஸ்நானத்தை இயேசு கிறிஸ்து ஒருவரே கொடுக்க முடியும். அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் இரண்டு கட்டங்களில் இந்த வாக்குதத்தம் நிறைவேறியிருக்கிறது கிறிஸ்துவின் அப்போஸ் தலர்களும்,(அப்.2: இவர்கள் யூதர்களுக்கு பிரதிநிதியாக இருக்கிறார்கள்). அடுத்து, கொர்நேலியு வீட்டாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிற ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.10: இவர்கள் புறஜாதியினருக்கு பிரதி நிதியாக இருக்கிறார்கள்) இந்த இரண்டு சம்பவங்களைத் தவிர பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றதாக ஆதாரம் இல்லை. இந்த ஞானஸ்நானத்துக்கு இன்று அவசியம் இல்லை. இந்த இரண்டு சம்பவங்கள் மூலம், தேவனுடைய ராஜ்யம் ,யூதர், புறஜாதியார் இருவருக்கும் திறக்கப்பட்டு விட்டது. தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டார் என்பதற்கு இவைகள் சாட்சியாக இருந்தது. பரிசுத்த ஆவி ஞானஸ்நானம் ஒரு வாக்குத்தத்தம். தண்ணீர் முழுக்கினாலான ஞானஸ்நானத்தை கவனிப்போம். "ஞானஸ்நானம்" என்ற வார்த்தை பேப்டிசோ என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பு, அர்த்தம் முழுக்கு,அமிழ்த்து என்பதாகும்.

ஞானஸ்நானத்தில் என்ன அடங்கி இருக்கிறது என்று பார்ப்போம். ஞானஸ்நானம் நீரினால் கொடுக்கப்படுவது (மத்.3:11) அப்.8:36–ல் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரி இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்" என்று பார்க்கிறோம். தண்ணீர் மிகுதியான இடத்தில், யோவான் ஞானஸ்நானம் கொடுத்து வந்தான் (யோவா.3:23). ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறவன், கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்படுகிறான் (ரோம.6:3,4). எனவே, ஞானஸ்நானத்திற்கு அதிக நீர் அவசியம் என்றும், தண்ணீரில் முழுக்கப்படுதல் என்றும் புரிந்து கொள்ளுகிறோம்.

அடுத்தபடியாக யார் இந்த ஞானஸ்நானத்தை பெறக்கூடியவர்கள் என்று பார்ப்போம். முதலாவது போதிக்கப்பட்டவர்கள். நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள்" என்று கிறிஸ்து கூறினார் (மத். 28:19). இரண்டாவது: விசுவாசிக்கின்றவர்கள் "விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்றார் கிறிஸ்து (மாற்.16:16). மூன்றாவது: பாவங்களை விட்டு மனந்திரும்பியவர்கள், "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுங்கள்" என்று பேதுரு கூறினார்(அப்.2:36). சிறு குழந்தைகள், போதிக்கப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்ப வேண்டிய பக்குவத்தில் இல்லை. ஆகவே அவர்களுக்கு ஞானஸ்நானம் தேவையில்லை. இன்று மத வட்டாரங்களில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை பாரம்பரியமாக வந்தது. வேத வசன ஆதாரம் எதுவும் இல்லை.

இனி, ஞானஸ்நானத்தின் நோக்கங்களைப் பார்ப்போம். முதலாவது ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கென்று கொடுக்கப்படவேண்டும் (அப்.2:38).

அனனியா சவுலைப்பார்த்து, இப்பொழுது தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் (அப்.22:16). இரண்டாவது, தேவனுடைய ராஜ்யத்தில் அங்கமாக்கப்பட ஞானஸ்நானம் தேவை. "ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்" என்று கிறிஸ்து கூறினார்(யோவா.3:5). மூன்றாவது, கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக இணைக்கப்பட, ஞானஸ்நானம் அவசியம். அதன் மூலம் மரணத்தில் கிறிஸ்து சிந்திய ரத்தத்தோடு சம்பந்தப்படுகிறோம். அந்த ரத்தமே ஒருவருடைய பாவங்களை கழுவும். தண்ணீர் அல்ல. நான்காவது, ஞானஸ்நானம் ஒருவனை ரட்சிக்கிறது (மாற்.16:16). அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மன சாட்சியின் உடன் படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் ரட்சிக்கிறது என்று பேதுரு கூறினார் (1பேது.3:21). ஐந்தாவது, ஞானஸ்நானம் கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாக இணைக்கிறது. "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும் சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்"என்றார் பவுல் (1கொரி.12:13). அந்த சரீரமாவது சபையாகும் (எபே.1:21,23). அதற்கு கிறிஸ்துவே தலையாயிருக்கிறார். சரீரம் ஒன்றே (எபே.4:4). ஆகவே சபையும் ஒன்றே. அந்த ஒரே சரீரமான சபையில் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சேர்க்கிறார்(அப்.2:47). அது கிறிஸ்துவினுடைய சபை (மத்.16"18).

வேத வசனப்படி ஞானஸ்நானம் பெற்றவன், கிறிஸ்துவின் சபையில் அங்கமாகிறான். இது நம் தேர்வு அல்ல. கர்த்தர் தாமே சேர்க்கிறார். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், ரட்சிக்கப்பட்டவர்களின் 11 சம்பவங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் எல்லாவற்றிலும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள்.

நண்பனே, ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டாயா? நீ ரட்சிக்கப்பட, ஞானஸ்நானக் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஞானஸ்நானம் முக்கியம் அல்ல என்று நாம் அதை ஒதுக்கி விட முடியாது. கர்த்தர் கொடுத்த கட்டளை ரட்சிப்பிற்கான நிபந்தனை. நாம் கீழ்ப்படிந்தேயாகவேண்டும். ஞானஸ்நானத்தை பற்றி வேதம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறதோ அந்த அளவுக்கு நாங்களும் வலியுறுத்தி கூறுகிறோம். மற்ற படி, அந்த கட்டளையை தள்ளி விடவோ, அதை மிகைப்படுத்துவதோ எங்கள் நோக்கம் அல்ல.பழைய ஏற்பாட்டில் 2 ராஜாக்கள் 5–ம் அதிகாரத்தில் சீரிய ராஜாவின் படைத்லைவனான நாகமானைப் பற்றி வாசிக்கிறோம். அவன் குஷ்டரோகியாக இருந்தான். குஷ்டரோகம் நீங்க யோர்தான் நதியில் 7 தரம் முழுகினபோது, அவன் மாமிசம் சிறு பிள்ளையின்

மாம்சத்தை போல மாறி, அவன் சுத்தமானான். அதைப் போலவே இன்று நாமும் ஞானஸ்நானத்தில் கீழ்ப்படியும்போது, நாம் பாவ வியாதியிலிருந்து குணப்படுகிறோம். கிறிஸ்துவின் மீதுள்ள நம் விசுவாசம் நம்மை ரட்சிக்கிறது என்றாலும், இந்த நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்தேயாக வேண்டும்.

நீ கிறிஸ்துவுக்குள் வர வாஞ்சிக்கிறாயா? பழைய பாவங்களிலிருந்து கழுவப்பட விருப்பமா? புது சிருஷ்டியாக தேவனுடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கமாக்கப்பட ஆசையா? இன்றே தேவ சித்தத்திற்கு கீழ்ப்படியுங்கள். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிப்பாராக.

## எர்மோன் மலை

இதன் அர்த்தம் **"பரிசுத்தமுள்ள"**. எர்மோன் பாலஸ்தீனாவின் வடகிழக்கு எல்லையில் உள்ள ஒரு மலைத்தொடர். அது 9000 அடி உயரமும் பதினைந்து மைல் நீளமும் கொண்டதாகும். இதன் மேல் மூன்று சிகரங்கள் உண்டு. இந்த மலையிலிருந்து பாயும் தண்ணீர் சுற்றியிருக்கும் பூமியை செழிப்பாக்கினது. சங்.29:6 சொல்லப்பட்ட **"சீரியோன்"** எர்மோன் மலையைக் குறிக்கிறது. (உபா.3:8,9; 4:47; யோசுவா12:1; சங்.89:12).

***S. Rajaprasath***
***Madurai***

## பொது அறிவு சோதனை

1. இந்திய ராணுவத்தை நிர்வகித்து இயக்குபவர் யார்?
ஆ) ஜனாதிபதி இ) பிரதமருடன் மத்திய அமைச்சர்கள் ஈ) பாதுகாப்புத்துறை அமைச்சகம்
2. நமது நாட்டில் விமானப்படை எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
அ) 1930 ஆ) 1934 இ) 1932
3. கப்பல் படை அகடாமி அமைந்துள்ள நகரம் எது?
அ) சென்னை ஆ) மும்பை இ) கொச்சி
4. இந்திய ராணுவத்தில் பெண்கள் அணி இடம்பெற்ற ஆண்டு எது?
அ) 1943 ஆ) 1955 இ) 1993
5. நாட்டின் பாதுகாப்புக்காக கி.மு.414-ல் பாதுகாப்புக் குழு அமைத்தவர்கள் யார்?
அ) மராட்டியர்கள் ஆ) தெலுங்கர்கள் இ) தமிழர்கள்

**விடைகள்: 1. பாதுகாப்புத்துறை அமைச்சகம் 2. 1932 3. கொச்சி 4. 1993 5. தமிழர்கள்**

**பெண்கள் பகுதி**

# ஞான இருதயமுள்ள ஸ்திரீகள்

## The Women that were wise hearted

*-Glory Arjunan*



**–சென்ற மாதஇதழின் தொடர்**

யாத்திராகமம்35:23,26–ம் வசனத்திலே தங்களின் கைகளில் நூற்று அதன்பின் தாங்கள் நூற்ற நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள் என்றும் மேலும் எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ அவர்கள் வெள்ளாட்டு மயிரைத் திரித்து காணிக்கையாக கொண்டுவந்தார்களெனவும் வாசிக்கிறோம். ஆக, கர்த்தருக்குக் காணிக்கையை செலுத்துவதில் அதிகமாக பிரயாசமெடுத்து கடினமாக உழைத்து கர்த்தருக்கென்று செலுத்தியுள்ளனர். இன்றைய எந்திர உலகில் இயந்திரங்களே நூல் நூற்று விடுகிறது. ஆனால் அவர்களோ தங்கள் கைகளினால் நூற்றிருக்கிறார்கள். நிச்சயமாக மிகவும் கஷ்டப்பட்டு நூல் நூற்றிருப்பார்கள். கஷ்டப்பட்டுதான் வெள்ளாட்டு மயிரையும் திரித்திருப்பார்கள். இவ்வாறாக தங்களுடைய உற்சாகத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அதுவும் மனப்பூர்வமாய் செய்துள்ளனர் என வாசிக்கிறோம்.

இன்று கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளுகிற அன்பு சகோதரியே, சற்றே உங்கள் இருதயம் ஞானமுள்ளதாகவும் ஞான எழுப்புதல் அடைந்துள்ளதாகவும் இருக்கிறதா என சோதித்துப்பாருங்கள். வெறுமனே மனக்கிளர்ச்சிக்கும் சரீர உற்சாகத்திற்கும் இடமளித்து வருகிறீர்களா? அன்றைய நாட்களில் ஆசரிப்பு கூடாரத்தை அலங்கரித்த ஸ்திரீகளைப்போல இன்றைய நாளில் கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றும்படி உங்கள் கைகளின் பிரயாசத்தை செலவு செய்கிறீர்களா? அல்லது யூதர் அடையாளத்தைத் தேடினது போல நீங்களும் இன்னும் கர்த்தரிடத்தில் வேலைகிடைத்துவிட்டால் அல்லது என் பிள்ளைகளுக்கு வேலைகிடைத்துவிட்டால் அல்லது திருமணம் நடந்துவிட்டால் அல்லது என் நோய்தீர்ந்துவிட்டால் அல்லது என் கடன் பிரச்சனை தீர்ந்துவிட்டால் அல்லது எனக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்துவிட்டால் கர்த்தரை விடாது பின்பற்றுவேன் என்று அடையாளங்களையே தேடிக்கொண்டிருக்கிறீர்களா? அன்பு சகோதரியே, கர்த்தர் சர்வ வல்லவர், ஐசுவரியசம்பன்னர் என்று விசுவாசிக்காதவரை நிச்சயமாக நீங்கள் எதையுமே பெற்றுக் கொள்ள முடியாது. அப்படியே ஏதேனும் பெற்றுக்கொண்டாலும் அவைகள் அநித்தியமானவைகள். அழிந்துபோகக்கூடியவைகள் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மறுமையில் நித்திய வாழ்வையும் கொடுக்கமாட்டாதவைகள் என்பதை நீங்கள்

அறிந்துகொள்ள விரும்புகிறேன். உங்கள் வாழ்வில் இதையே முன்வைப்பீர்களென்றால் நிச்சயமாகவே நீங்கள் ஞான இருதயமுள்ள ஸ்திரீகளாக இருக்க முடியாது. கர்த்தரிடத்திலிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கென்று கொடுத்து சபையை அலங்கரியுங்கள். மனப்பூர்வமாகக் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

**தாய்க்குரிய கடமைகள் (Motherly Duties):** அன்னாளும் கூட ஒரு ஞானமுள்ள ஸ்திரீதான். தன்னுடைய முதற்கனியைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தவள். கஷ்டப்பட்டு உழைத்து, பிரயாசப்பட்டு அதன் பலனைக் கர்த்தருக்குக் காணிக்கையாக கொடுத்துவிடலாம். எங்கள் பிள்ளைகளை எப்படி கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கமுடியும் என்கிறீர்களா? இந்த அன்னாள் மிகவும் துன்பப்பட்டு, துக்கமடைந்து, கர்த்தருடைய சமூகத்தில் அழுது மன்றாடி சாமுவேல் என்ற ஒரு மகனை அநேக வருஷங்களுக்குப்பின் பிள்ளையாக பெற்றெடுத்தாள். ஆனால் அவள் தன் முதற்கனியை கர்த்தருக்கென்றே ஒப்புக்கொடுத்து விட்டாள் என (1சாமு.1:27,28) வாசிக்கின்றோம். எல்லா ஆத்துமாக்களும் கர்த்தருடையது. கர்த்தரிடத்திலிருந்தே உங்களுக்குக் கிடைத்துள்ளது. அவர்களில் எந்த பிள்ளை மந்தமாகவும், படிப்பறிவில் குறைந்தவனாகவும் அல்லது இவன் எதற்கும் லாயக்கானவன் அல்ல, இவனை ஊழியத்திற்கு அனுப்பிவிடுவோம் என்று எண்ணுகிறீர்களா? அன்னாள், இவ்விதமான இழிவான எண்ணம் கொண்டவளல்ல, அநேக இக்கட்டு, ஏச்சு பேச்சு, மனக்கசப்பு, போன்றவற்றின் மத்தியில் ஒரே ஒரு மகனைப் பெற்றாள். அவளுக்கு அதுவே முதல் பிள்ளை. அவனை முதலாவதாக தேவனுக்குக் கொடுத்தாள். அது மாத்திரமல்ல, ஒரு தாயுக்குரிய கடமையைச் செய்துவந்தாள். "சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடைசெய்தான். அவனுடைய தாய் வருஷந்தோறும் செலுத்தும் பலியைச் செலுத்துகிறதற்காக, தன் புருஷனோடே கூட வருகிறபோதெல்லாம், அவனுக்கு ஒரு சின்னச் சட்டையைத் தைத்துக் கொண்டு வருவாள் (1சாமு.2:18,19).

பாருங்கள் ஒரு தாய் தன் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையை மட்டுமே செய்தாள். கர்த்தருக்கு முன்பாக அவன் பணிவிடை செய்ததில் இவள் குறுக்கிடவே இல்லை. ஆனால் இன்றோ சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தருக்குப் பயப்படுதலைக் கற்றுக்கொடுப்பதே இல்லை. தாங்கள் தான் கற்றுக்கொடுக்கவில்லையென்றால், சபையில் நடைபெறும் சிறுவர் வகுப்பிற்கு அனுப்பியாவது கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கலாமே. இவ்விஷயத்தில் அக்கரை கொள்ளாத ஸ்திரீ நிச்சயமாகவே ஒரு ஞான இருதயமுள்ள ஸ்திரீயாக இருக்க முடியாது, கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.

# சத்திய வார்த்தையில் சரித்திரம்-2

சரித்திர ஆய்வு

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 9841017621

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

2. இயேசுவின் சீடர்கள் எருசலேமில் கூடி வராமல் வேறு இடத்தில், வேறு காலகட்டத்தில் கிறிஸ்துவின் போதனையின்றி, மனிதரை பிரியப்படுத்தும்படியாக, **மனிதபோதனையால் உண்டாக் கப்பட்ட சபைக்கு தலைவராக இருக்கமுடியாது!** "அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் (மனிதர்களுக்கும்) பிரசங்கிக்கப் பட்டுவருகிறது" (கொலோ.1:23) காலம் கி.பி.701-ல் ஏசா.2:2-ல்கூறப்பட்ட **தீர்க்கதரிசனம் சுமார் 730 ஆண்டுகளுக்கு பிறகு நிறைவேறினது.**

இன்றும் சபையைக் குறித்து ஆழமாக அறியவிரும்பினால், 1. யோவான் ஸ்நானகன் (கி.பி.29-ல்) ராஜ்யம் / சபை சமீபமாயிருக்கிறது" (மத்.3:2) அவருக்கு பிறகு 2. இயேசுவும் "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யத்தை / சபையை காணுமுன் மரணத்தை ருசிபார்ப் பதில்லை என்றார்" (மாற்.9:1) பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என கூறிய 12 சீடர்களுக்கு கட்டளையிட்டார். மத்.10:7. "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது" என 70 பேருக்கு சொல்லும்படி கூறினார். 3. இயேசுவோடு சிலுவையில் அறையப் பட்டிருந்த குற்றவாளிகளில் "ஒருவன் ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" லூக்.23:42. மாற்.15:42-43. என்பதிலிருந்து அனேகமாக எல்லாருக்குமே இயேசுகிறிஸ்து ஸ்தாபிக்கப்போகிற ராஜ்யத்தை / சபையைக் குறித்து எதிர்பார்ப்புடன் அறிந்து காத்திருந்தார்கள் எனத்தெரிகிறது.

அப்2:24-27-ல் கூறியுள்ளபடி அப். பேதுரு பெந்தெகொஸ்தே என்ற மகிமையின் நன்னாளில் பிரசங்கித்த நற்செய்தியை கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நற்பெயரால் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்ட 3000 பேரை கர்த்தர்... சபையில் சேர்த்தார் என்பதை அறிகிறோம்.

தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப்பேசினார்கள் 2பேதுரு1:21

சிறுவர் பகுதி

# நூற்றுக்கு அதிபதி



*வேத பகுதி: மத்தேயு 8:5–13*

*-K.Mohan, B.Komarapalayam*

என் அன்பு தேவபிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசுகிறிஸ்து தான் தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்க அநேக அற்புதங்களை செய்து வந்தார்.

மத்தேயு 8:5–13–ல் பார்க்கும்போது நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சொஸ்தமாவதை பார்க்கிறோம். 100 பேருக்கு அதிபதியாக இருக்கிற இவன் தனக்கு பிரியமான வேலைக்காரன் வியாதிபட்டு இருக்கிறதை கண்டு இயேசுவிடம் வேண்டுகிறான். அதற்கு இயேசு நான் வந்து அவனை சொஸ்தமாக்குவேன் என்கிறார். அதற்கு அந்த நூற்றுக்கு அதிபதி நீர் என் வீட்டுக்கு வர நான் தகுதியுள்ளவன் அல்ல ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் என்கிறான். இதைக் கேட்ட இயேசு ஆச்சரியப்பட்டு இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று சாட்சியாக சொல்லுகிறார். பிறகு அவர்: நீ போ உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் குணமானான் என்று பார்க்கிறோம். அந்த வார்த்தையை நம்பி போனான். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! அவரை நம்பும்போது இவ்விதமான ஆசீர்வாதங்களை நாம் பெற முடியும்.

பாருங்கள் நூற்றுக்கு அதிபதியாக இருந்தும் இயேசு தன் வீட்டிற்கு வர தான் தகுதியுள்ளவன் அல்ல என்று தன்னைத் தாழ்த்தி இயேசுவிடம் பாராட்டைப் பெற்றான். ஆம், பிள்ளைகளே நாம் எவ்வளவு உயர்வான நிலையில் இருந்தாலும் தாழ்மையோடு இருந்து நூற்றுக்கு அதிபதி விசுவாசித்ததைப்போல இயேசுவை விசுவாசிப்போம். நீங்கள் அவ்விதமாக விசுவாசிப்பீர்களா? அப்படி விசுவாசிப்பீர்கள் என்றால் கர்த்தர் உங்களையும் அவ்விதமாக பாராட்டுவார். அப்பொழுது ஆண்டவருடைய அன்பை நாமும் பெற்றுக்கொள்வோம். கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிக்க அவர் மேல் விசுவாசம் கொள்ளுங்கள் அவரால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. நானும் அவ்விதமாகவே விசுவாசிக்கிறேன். நீங்களும் விசுவாசிப்பீர்களா!

**மனப்பாட வசனம்**

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப்பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபி 11:6).

## வேத அறிவுப் போட்டி எண்.78

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் **இம்மாதம் 25ம்தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். **பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. இயேசுவை அடக்கம் பண்ண வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தவன் யார்?
2. யாருடைய சொல்கேட்டு சூரியனும் சந்திரனும் ஏறக்குறைய ஒரு பகல் முழுதும் நடுவானத்தில் நின்றது?
3. நாற்பது வயதானபோது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி எவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று?
4. நான் உன் உணவைப் புசியேன்; நீ சர்வாங்க தகனபலி இடவேண்டுமானால், அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்று யார் யாரைப் பார்த்து சொல்வது?
5. தேவனை அறியாதவர்களும்,... சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களும்,...... அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, எப்படிப்பட்ட தண்டனையை அடைவார்கள்?
6. இஸ்ரவேலர் எல்லாரும் எந்த மனுஷனைக் காணும்போது மிகவும் பயப்பட்டு அவன் முகத்துக்கு விலகி ஓடிப்போவார்கள்?
7. நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன் அவனோ எங்களைத் தடைபண்ணினான் என்று எவனைக் குறிப்பிடுகிறார்?
8. கர்த்தருடைய ஆலயத்தில் அவளைக் கொல்லலாகாது என்று எந்த ஆசாரியன் எவளைச் சொல்லியிருந்தான்?
9. அன்பினிமித்தம் மன்றாடுகிறேன் என்று யார், யாருக்காக, யாரைநோக்கி மன்றாடுகிறான்?
10. கர்த்தாவே, நாங்கள் எங்கள் காதுகளால் கேட்ட எல்லாவற்றின்படியும் தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை என்று தேவ சமூகத்தில் விண்ணப்பம் பண்ணினவன் யார்?

இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக
வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய
கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு
மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலைவிரும்பும்
யாவருக்கும் அதைத் தந்தருளுவார். 2தீமோத்தேயு 4:8

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: B.Arjunan.

R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without prepayment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th Feb. 2007.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**

**உங்கள் வானொலியில்**






இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள்
மேலும்

**உங்கள் WIN TV யில்**






ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும்
வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**






தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202. S. India
Phone:04543-263278 Mobile:94435-58041 e.mail:thewordofchrist@sancharnet.in






**Church of Christ Gospel Preachers**



First Row: L to R 1)B.Arjunan, Dindigul Dt.,
2) John Schwartz, Nagai Dt.,
3) P.Boopathi, Karur Dt.,
4) R.Fernandas, Dharmapuri Dt.,
5) D.David Doss, Cuddalore Dt.,
6) J.Alphons, Thiruvarur Dt.,
Sec. Row: L to R 7) Viji, Tuticorin Dt.,
8) S.Rajendran, Erode Dt.,
9)P.David Murugan, Pudukkottai Dt.,
10) Christy Kumar, Theni Dt.,
11) A.Prabakaran, Namakkal Dt.,
12) M.Rajamani, Tirunelveli Dt.,
13) P.Govindarajan, Thanjavur Dt.,

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202